3/1 & G.G.P.
3/9

சுருக்கம்

நிலம் – கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர் வட்டம் – விசுவாதநாதபுரம் காளஸ்திபுரம் கிராமம் புல எ.3/1 மற்றும் 3/9இல் பரப்பளவு 67.7.5 (அ) 167.23 ஏக்கர் மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலத்தினை தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க (ELCOT) எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய்த் (நி.மு.7) துறை

அரசாணை (நிலை) எண்.88 நாள்.15.2.2008

படிக்கவும்:

1) கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கடித எண்.ந.க.எச்.1/46294/2006 நாள் .11.2006 மற்றும் 19.9.2007
2) சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடித எண்.பி2/37378/06, நாள் 11.12.2006 மற்றும் நாள் 16.8.2007

***

ஆணை:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம் விசுவநாதபுரம் காளஸ்திபுரம் கிராமம் புல எண் 3/1 மற்றும் 3/9இன் பரப்பளவு 67.7.5 எக்டேர் (அல்லது) 167.23 ஏக்கர் மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலத்தினை தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க "எல்காட்" (ELCOT) நிறுவனத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்வது குறித்து கிருஷ்ணகிரி மாவட்டம் ஆட்சியர் கீழ்க்கண்டவாறு அறிக்கை அனுப்பியுள்ளார்.

(i) ஒசூர் வட்டம், காளஸ்திபுரம் தரப்பு விஸ்வநாதபுரம் கிராமத்தில் கீழ்க்கண்ட அரசு புறம்போக்கு நிலங்கள் தகவல் (IT Park) தொழில்நுட்பப் பூங்கா அமைக்க தேவைப்படுவதாக எல்காட் நிறுவனம் கோரியுள்ளது.

| புல எண். | பாகுபாடு | மொத்த விஸ்தீரணம் | பராதீனம் செய்யும் பரப்பு |
|---|---|---|---|
| 1/2 | அனாதீனம் | 0.77.5 | 0.77.5 |
| 1/3 | அனாதீனம் | 0.23.5 | 0.23.5 |
| 1/4 | அனாதீனம் | 0.22.0 | 0.22.0 |
| 2/1 | அனாதீனம் | 0.29.5 | 0.29.5 |
| 2/7 | அனாதீனம் | 0.15.5 | 0.15.5 |
| 2/8 | அனாதீனம் | 0.11.5 | 0.11.5 |
| 2/9 | அனாதீனம் | 0.13.0 | 0.13.0 |
| 3/1 | மேய்ச்சல் தரை | 43.01.0 | 43.01.0 ✓ 106.23 |
| 3/2 | ஏரிக்கரை | 0.36.5 | 0.36.5 |
| 3/3 | அனாதீனம் | 0.03.5 | 0.03.5 |
| 3/6 | வாரி | 0.16.5 | 0.16.5 |
| 3/8 | அனாதீனம் | 0.05.5 | 0.05.5 |
| 3/9 | மேய்ச்சல் தரை | 24.69.5 | 24.69.5 ✓ 60.99 |
| 3/10 | வாரி | 0.39.5 | 0.39.5 167.22 |
| | மொத்தம் | 70.64.0 | 70.64.0 |

(ii) மேற்குறிப்பிட்ட புலங்களில் புல எண்கள்.3/1 மற்றும் 3/9–இல் முறையே 43.01.0 மற்றும் 24.69.5 ஹெக்டேர் நிலங்கள் மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்களாகும். பூஸ்திதியில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையாக உபயோகப்படுத்தப் படுவதில்லை

என்பதாலும், இந்த புலங்கள் தொழில்நுட்ப பூங்கா அமைக்க தகுதியான நிலங்களாக இருப்பதால் முழுநிலமும் பராதீனம் செய்ய உள்ளது. இவ்வினத்தில் மொத்தம் 70.64.0 ஹெக்டேர் நிலம் நிலப்பராதீனம் செய்ய உத்தேசிக்கப்பட்ட இனத்தில் 67.70.5 ஹெக்டேர் நிலமும் உள்ளடக்கியதாகும்;

(iii) ஒசூர் வட்டம், காளஹஸ்திபுரம் தரப்பு, விஸ்வநாதபுரம் கிராம புல எண்.3/1, 3/9 மேய்ச்சல் தரை அரசு புறம்போக்கு நிலங்களை தொழில்நுட்ப பூங்கா அமைக்க எல்காட் மேலாண்மை இயக்குநர் பெயரில் நிலம் பராதீனம் செய்ய ஆட்சேபணைகள் இருப்பின் தெரிவிக்க விஸ்வநாதபுரம் கிராமத்தில் 30.09.2006 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி உத்தேச மாறுதலுக்கு நாளதுவரை பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை.

(iv) ஒசூர் வட்டம் காளஹஸ்திபுரம் தரப்பு, விஸ்வநாதபுரம் கிராம புல எண்கள்.3/1, 3/9 மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்களை, எல்காட் மேலாண்மை இயக்குநர் பெயரில் பராதீனம் செய்ய தற்போது புதிய ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுள்ளதால் அவர்களிடமிருந்து ஊராட்சி மன்ற தீர்மானம் பெற்று பின்னர் அனுப்பி வைக்கப்படும் என்றும் தற்போது தலைவர் சென்ன சந்திரம் ஊராட்சி தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

(v) ஒசூர் வட்டம் காளஸ்திபுரம் தரப்பு, விஸ்வநாதபுரம் கிராம புல எண்.3/1, 3/9 – இல் 19 நபர்களும் நீண்டகாலமாக ஆக்கிரமிப்பு செய்து உழவடை செய்தும், ஓட்டு வீடுகள் கட்டியும் அனுபவித்து வருவகிறார்கள். மேற்படி நபர்களிடமிருந்து 2எ தீர்வை வசூல் செய்யப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி நபர்களது ஆக்கிரமிப்புகள் ஆட்சேபணையுள்ளது என்பதால் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புல எண்.3/1–இல் உழவடை மற்றும் சாகுபடி ஆக்கிரமிப்புகளும், புல எண்.3/9–இல் ஓட்டுவீடுகள் 8ம் கட்டப்பட்டு அதில் குடியிருந்து வருகின்றனர். ஆட்சேபணையான ஆக்கிரமிப்புகள் அகற்ற விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது;

(vi) நிலம் பராதீனம் செய்யப்படும் புலன்களில் எஸ்.டி.டி. தென்னை மரங்கள் உள்ளன. கணக்கில் வராத தென்னை 21, புளியமரம் 5, நீலகிரி மரம் 5, ஆல்மரம் 1, வேம்பன் மரம் 1, வேலமரம் 7, புங்கன் மரம் 4, மற்றும் முட்புதர்கள் உள்ளன:

(vii) மேற்கண்ட புலங்கள் தடையாணை புத்தகத்தில் பதியப்பட்ட நிலங்கள் அல்ல. மேற்கண்ட புலங்கள் யாவும் ஆதிதிராவிடர் நிபந்ததனைக்குட்பட்ட நிலங்கள் அல்ல. இக்கிராமத்தில் போதுமான அளவு சமுதாய புறம்போக்கு நிலங்கள் உள்ளன. மேற்படி புலங்கள் நிலவகை மாற்றம் செய்வதால் பொதுமக்கள் நலன் எந்தவிதத்திலும் பாதிக்கப்படுவதில்லை;

(viii) நிலப்பராதீனம் செய்ய உத்தேசிக்கப்பட்ட புலங்களையும், மாதிரி நிலத்தையும் 31.8.2006 அன்று மாவட்ட ஆட்சித்தலைவரால் தணிக்கை செய்யப்பட்டு உள்ளது. காளஸ்திபுரம் தரப்பு, விஸ்வநாதபுரம் கிராம புல எண்.3/1, 3/9 ஆகிய மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்களுக்கு நிலமதிப்பு நிர்ணயம் செய்ய காளஹஸ்திபுரம் கிராமத்தில் நடைபெற்ற விற்பனை புள்ளி விவரங்கள் 1.7.2005 முதல் 31.10.2006 வரையிலானவை ஒசூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சேகரிக்கப்பட்டது. மேற்படி ஓராண்டு காலத்தில் 29 விற்பனைகள் நிகழ்ந்துள்ளன. கையகப்படுத்தப்படும் நிலங்களின் விலை மதிப்பை நிர்ணயம் செய்ய மாதிரி நிலங்கள் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி 29 விற்பனைகளில் கீழ்க்கண்டவைகள் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது:–

வ.எண்கள். 5,6,7,8,9,10,14,15,16,17,18,19,27 மற்றும் 28,29 அதிக மதிப்பு உள்ளது தள்ளுபடி.

வ.எண்கள்.1,2,3,11,12,13,21,22,23 மற்றும் 24 மதிப்பு மிக குறைவு தள்ளுபடி.

வ.எண்கள். 4 மற்றும் 20 வீட்டுமனைகளாக விற்பனை தள்ளுபடி.
வ.எண்கள். 25 மற்றும் 26 தேர்வு செய்யப்பட்டது.

(ix) நிலமாறுதல் செய்யப்பட உள்ள 67.70.5 ஹெக்டேர் நிலத்திற்கு நிலமதிப்பு நிர்ணயம் செய்ய மாதிரி நிலமாக விஸ்வநாதபுரம் கிராமம் புல எண்.41 விஸ்தீரணம் 1.78 ஏக்கர் நிலம் ஒசூர் சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.5142 /06 நாள். 26.4.06 –இன்படி ரூ. 1,78,000/–க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஏக்கர் ஒன்றின் மதிப்பு ரூ.1,00,,000/– ஆகிறது. இந்த நிலம், நிலப்பரிவார்த்தனை செய்யப்படும் நிலங்களுக்கு அருகாமையிலும், மண்வயனம், தரம் தீர்வை ஆகியன நிலப் பரிவர்த்தனை செய்யப்படும் நிலங்களுக்கு குறைவானதாகவும் உள்ளதால் இதனையே மாதிரி நிலமாக தேர்வு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| 1. நிலமதிப்பு ஒரு ஏக்கர் மதிப்பு | ரூ. 1,00,000/– |
| 2. ஒரு ஹெக்டேர் மதிப்பு | ரூ. 2,47,000/. |
| 3. இதன்படி பராதீனம் செய்யப்பட உள்ள 67.70.5 ஹெக்டேர் மதிப்பு | ரூ.1,67,231,135/– |
| 4. மரத்தின் மதிப்பு | ரூ. 6120.00 |
| 5. ஆக மொத்தம் | ரூ. 1.67.29.255 |

(x) மேற்படி புலங்கள் புதிய தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்க பராதீனம் செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் நிலமதிப்பு தொகையினை வசூலித்துக்கொண்டு மேலாண்மை இயக்குனர், எல்காட் நிறுவனத்திற்கு பராதீனம் செய்யலாம். முன்னதாக மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்களை நிலமாற்றமோ/பராதீனமோ செய்யக்கூடாது எனவும், அவசியமாயின் சமமான வேறு புறம்போக்கு நிலங்களை தேர்வு செய்து அதனை மேய்ச்சல் தரை நிலமாக மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற அரசாணை எண்.186, கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் மீன்வளத்துறை, நாள்.11.12.2001ஐ இவ்வினத்தில் விலக்கல் அளித்து ஆணை பிறப்பிக்கலாம்.

2. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அறிக்கையை மேலனுப்புகையில் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார்.

(அ) கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் எல்காட் நிறுவனத்திற்கு விஸ்வநாதபுரம் கிராமம் புல எண்.3/1, 3/9–இல் 67.70.5 எக்டேர் அல்லது 167.23 ஏக்கர் நிலம் தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க கருத்துரு அனுப்பியுள்ளார்.

முன்மொழிவு செய்யப்பட்ட புலங்கள் பின்வருமாறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது:–

| வ.எண். (1) | புல எண். (2) | பரப்பளவு (3) | வகைப்பாடு (4) | குறிப்பு (5) |
|---|---|---|---|---|
| 1. | 3/1 | 43.01 | மேய்க்கால் புறம்போக்கு | மேய்க்கால் புறம்போக்கு நிலம் செயற்குறிப்பாக இருந்தால் கால்நடை மற்றும் மீன்வளத்துறையின் அரசாணை எண்.186, நாள்.1112.01–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு திருப்திகரமாக இருக்க வேண்டும் |
| 2. | 3/9 | 24.69.5 | மேய்க்கால் புறம்போக்கு | |

(ஆ) முன் மொழியப்பட்ட புலங்களில் ஆக்ரமணங்கள் சின்னங்கள், கட்டிடங்கள், மரங்கள், மின் அமைப்புகள் மற்றும் தொல்லியல் துறை சம்மந்தமான நினைவு சின்னங்கள் ஏதுமில்லை. மேய்க்கால் புறம்போக்கு நிலங்கள் என்ற வகைப்பாடு கொண்ட நிலங்களாக இருந்தால் அரசுக்கு அனுப்பப்படும் முன்மொழிவுகள் கால்நடை பராமரிப்புத் துறையின் அரசாணை நிலை எண்.186, கால்நடை பராமரிப்பு நாள்.11.12.01—இல் உள்ள நிபந்தனைகள் பூர்வாங்கமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்: மற்றும்

(இ) இக்கிராமங்களில் 'அ' விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டு ஆட்சேபங்கள் ஏதும் பெறப்படவில்லை.

3. இந்நேர்வில் தொடர்புடைய புலம் தடையாணைக்குட்பட்ட ஆட்சேபகரமான மேய்க்கால் புறம்போக்கு நிலம். இதன் பரப்பளவு 67.70.5 ஹெக்டேர் ஆகும். எனவே இந்நிலங்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.186, கால்நடை பராமரிப்புத் துறை, நாள்.11.12.01—இன்படி இந்நிலங்களுக்கு சமமான நிலம் மாவட்டாட்சியரால் மாற்றம் நிலமாக அடையாளம் காணப்பட்டு அந்நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்றுவதற்கான செலவீனத்தை நிலம் கோரும் துறை செலுத்த வேண்டும். மற்றும் மேய்ச்சல் நிலங்களை மாற்று பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு, செயலாளர் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அவர்களிடம் தடையின்மைச் சான்று பெறப்படவேண்டும். இது தொடர்பான நடவடிக்கை விவரங்களை மாவட்ட ஆட்சியர் அரசுக்கும், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருக்கும் தெரிவிக்க வேண்டும்.

4. எனவே ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,00,000/— (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) என்ற விற்கிரய அடிப்படையில் முன்மொழியப்பட்ட நிலஉரிமை மாற்ற நிலங்களின் மதிப்பு ரூ.1,67,23,135/— ஆகின்றது. வழிகாட்டி மதிப்பீட்டின்படி ஒரு ஏக்கர் ரூ.24,500/— ஆகும்.

5. மேற்கண்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையினை ஏற்று கிருஷ்ணகிரி மாவட்டம் விஸ்வநாதபுரம் கிராமம் புல எண்.3/1, 3/9 முதலியவற்றில் 67.70.5 எக்டேர் அல்லது 167.23 ஏக்கர் எல்காட் நிறுவனத்திற்கு ஒரு மடங்கு நிலக்கிரயமாக ரூ.1,67,23,135 மற்றும் மரக்கட்டணம் வசூலித்துக் கொண்டு வருவாய் நிலை ஆணை எண்.24(6)—இன் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு நில உரிமை மாற்றம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார். அரசாணை (நிலை) எண்.35, தகவல் தொழில்நுட்ப துறை, நாள்.29.10.1999—இல் தொழில் நுட்ப பூங்கா அமைக்கும் கருத்துருக்களில் 'எல்காட்' நிறுவனத்திற்கு ஒரு மடங்கு சந்தை மதிப்பினை நிலக்கிரயமாகப் பெற்று நில உரிமை மாற்றம் செய்யலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 6.12.2006 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கோயம்புத்தூர் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைப்பதற்கு 'எல்காட்' நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்த நிலத்திற்கு அரசு நிர்ணயம் செய்த (ஒரு மடங்கு சந்தை மதிப்பு) நில மதிப்பினை மாற்றி அமைக்கத் தேவையில்லை என தலைமைச் செயலர் அறிவுரை வழங்கினார். எனவே, இந்நேர்விலும் நிலமதிப்பாக ஒரு மடங்கு சந்தை மதிப்பினை நிலக்கிரையமாக நிர்ணயம் செய்யலாம் எனக் கருதப்படுகிறது என்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரிடம் மேய்க்கால் புறம்போக்கு நிலத்திற்கு மாற்று நிலம் தரப்பட்டுள்ளதா என்று கோரப்பட்டது. அவர் தனது 19.9.007 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

(i) ஒசூர் வட்டம், விஸ்வநாதபுரம் கிராமம் புல எண்.1/2 மற்றும் சில புலங்களில் மொத்த பரப்பு 70.64.0 ஹெக்டேர் நிலத்திற்கான ஊராட்சிமன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேய்ச்சல் தரைப் புறம்போக்கு நிலத்திற்கு மாற்று நிலம் வழங்க ஒசூர் வட்டத்தில் உகந்த நிலம் இல்லாததால் கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும்

வட்டத்தில் உள்ள குருவிநாயனப்பள்ளி கிராமத்தில் இருமடங்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும்;

(ii) ஒசூர் வட்டம் விஸ்வநாதபுரம் கிராமத்தில் எல்காட் நிறுவனத்திற்கு தொழில் நுட்ப பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மேய்ச்சல் தரைப்புறம்போக்கு நிலத்தற்கு ஈடாக கிருஷ்ணகிரி வட்டம், குருவிநாயனப்பள்ளி கிராமப் புல எண்.1—ல் 135.41.0 ஹெக்டேர் தீர்வை ஏற்படாத நிலத்தை மேய்ச்சல் தரைப் புறப்போக்காக நில வகை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி நிலமாறுதல் செய்து வழங்கப்பட உள்ள 334.46 ஏக்கர் நிலத்திற்கு ரூ.1,49,71,099/— மதிப்பாகிறது.

(iii) கால்நடை பராமரிப்பு துறை, இணை இயக்குநர் தர்மபுரி இந்நேர்வில் மறுப்பின்மைச் சான்று வழங்க, இயக்குநருக்கு பரிந்துரை செய்துள்ளதாகவும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மாற்று நிலம் தேர்வு செய்ய அனைத்து நிபந்தனையும் பூர்த்தி செய்துள்ளார் என்றும், சென்ன சந்திரம் ஊராட்சி நிலம் எல்காட் நிறுவனத்திற்கு வழங்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேலாண்மை இயக்குநர், எல்காட், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ரூ.10,03,380/—க்கான காசோலை மாற்று நிலத்திற்கான தொகையாக செலுத்தியுள்ளார்.

6. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து ஏற்க முடிவு செய்தது அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம் விஸ்வநாதபுரம் கிராமம் புல எண்.3/1, 3/9 முதலியவற்றில் 67.70.5 எக்டேர் அல்லது 167.23 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மேய்க்கால் புறம்போக்கு என்ற தடையாணைக்குட்பட்ட நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்யும் நாளில் நிலவும் ஒரு மடங்கு சந்தை மதிப்பினை வசூலித்துக் கொண்டு தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கும் பொருட்டு வருவாய் (நிலை) ஆணை எண்.24(6)—இன் கீழ் வழக்கமான நிபந்தனைகளுடன் 'எல்காட்' நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

(ஆ) மேலே கூறப்பட்ட புலங்களை உரிய வகைபாடு மாற்றம் செய்யப்பட வேண்டும்;

(இ) நிலம் எந்த நோக்கத்திற்காக தேவைப்படுகிறதோ அதற்காக மட்டுமே நிலத்தை பயன்படுத்த வேண்டும்;

(ஈ) பிரஸ்தாப புலமோ அல்லது ஒரு பகுதியோ தேவையில்லையெனில் அதை வருவாய்த் துறைக்கு மீண்டும் ஒப்படைக்க வேண்டும்;

(உ) நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள மேய்க்கால் புறம்போக்கு நிலத்திற்கு ஈடாக மாற்று நிலமும், அதற்கான அபிவிருத்திக் கட்டணமும், நடைமுறையில் உள்ளபடி கேட்பு நிறுவனம் செலுத்தவேண்டும்.

(ஊ) தடையில்லாச் சான்றினை கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறையிடமிருந்து பெறவேண்டும்;

(எ) கல்கிரயம், மரக்கிரயம் மற்றும் உட்பிரிவு கட்டணம் ஆகியவற்றைக் கேட்பு நிறுவனம் செலுத்த வேண்டும்.

7. மேலே பத்தி 6–இல் உள்ள ஆணைக்கேற்ப தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநர் ஆணைப்படி)

அம்புஜ் சர்மா
அரசு செயலாளர்

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம்,
கிருஷ்ணகிரி.
மேலாண்மை இயக்குநர்,
எல்காட், சென்னை 600 035.

நகல்
செயலர், தகவல் தொழில் நுட்பத் துறை சென்னை–9.
செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துத் துறை, சென்னை–9.
செயலர், நிதித்துறை, சென்னை–9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
அமைச்சர்(நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர் சென்னை–9.
அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டுவசதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலர், வருவாய்த்துறை, அவர்களின் தனிச்செயலர், சென்னை–9.
துணைச் செயலாளர் (நி.மு.) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரிக்கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்